செய்தி வெளியீடு எண் : 2162 நாள் : 30.11.2022

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையினால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு மாநில குழந்தைகள் கொள்கையை முழு அளவில் அமல்படுத்துவதற்குரிய செயல் திட்டம் வகுத்திட சமூக நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள், சமூகப் பாதுகாப்புத்துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் உயர் அதிகாரிகளுடன் மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் அவர்கள் இன்று (30.11.2022) சென்னையில் விரிவான ஆலோசனை கூட்டம் நடத்தினார்.

இக்கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஷம்பு கல்லோலிக்கர், இ.ஆ.ப., ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள் குழும இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., சமூக நலத்துறை இயக்குநர் திருமதி. த. ரத்னா, இ.ஆ.ப., சமூகப் பாதுகாப்புத்துறை இயக்குநர் திருமதி. ச. வளர்மதி, இ.ஆ.ப., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் இணைச் செயலாளர் திருமதி. சீதாலட்சுமி, இ.ஆ.ப., மற்றும் சமூக நலத்துறையின் கூடுதல் இயக்குநர் திருமதி. கார்த்திகா, இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in